# வாழ்விக்கும் வைணவம்

வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி
18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011
Website: http://dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

விமான பயணத்துக்கோ, கப்பல் பயணத்துக்கோ, ரயில் அல்லது பஸ் பயணத்துக்கோ முன்பதிவு செய்ய வேண்டுமானால் நாள் கணக்கிலோ அல்லது மிஞ்சிப் போனால் மாதக் கணக்கிலோ தான் முன் கூட்டி டிக்கட் பதிவு செய்வார்கள். 20 வருடம் அல்லது முப்பது வருடம் அல்லது 50 வருடம் என்ற புக்கிங் செய்வதில்லை. ஆனால் ஏறக் குறைய ஒரு நூற்றாண்டு காலம் கூட முன்பதிவு செய்ய வசதி உள்ள ஒரு இடம் தான் ஸ்ரீவராஹப் பிரான் புக்கிங் கவுண்டர்.

இதை அவரே சொல்லி இருக்கிறார். வராஹ அவதார எடுத்த எம்பெருமான் தன் அன்புப் பிராட்டி பூமிதேவியிடம் "ஒரு மனிதன் ஆரோக்யத்துடனும் தெளிவான புத்தியுடனும் இருக்கும் போது, என்னை நோக்கிக் கூப்பிட்டு இந்த ஜன்மத்தின் முடிவில், தான் மோட்சம் அடையவேண்டும் என்று விண்ணப்பித்து விட்டான் என்றால் அவனுக்கு மரணம் எத்தனை ஆண்டுகாலம் கழித்து வந்தாலும் மரணப் படுக்கையில் அவன் தன் நினைவு இழந்து கட்டைடையைப் போல் கல்லைப் போல் கிடக்கும்போது அவன் அன்று செய்த சரணாகதியை நினைவில் கொண்டு அவனை பரமபதத்திற்கு அழைத்துச் செல்வேன்" என்று வாக்கு கொடுத்திருக்கிறார்.

அவருடைய கூற்று வராக சரம ச்லோகங்கள் என்று அழைக்கப்படும். அந்த ச்லோகங்கள் வாழ்விக்கும் வைணவம் நமக்கு வழங்கிய வரப்பிரசாதங்கள். அவை எண்ணிக்கையில் இரண்டு. ஆனால் அவை நமக்குத் தரும் ஏற்றமோ, உள்ளது இமயம் போல் திரண்டு. அந்த ச்லோகங்களைப் பதம் பதமாக பிரித்துத் தியானித்தாலே அது ஒரு இன்பம்.

1. ஸ்திதே மனஸி:

மனிதன் தெளிவான நிலையான அறிவோடு இருப்பதே அரிது. குரங்கு போல் தாவும் மனமும் அதில் கோடி வகையான கோரிக்கைகளும் அவனை சதா அலைக் கழித்துக் கொண்டே இருக்கும். வீட்டைப் பற்றி சிந்திப்பதா? வேறு தொழிலைச் செய்ய செயல்படுவதா? வருமான வரிக்கு என்ன செய்வது? அல்லது வருமானத்துக்கு என்ன செய்வது? பெண் எடுப்பது எங்கே? பெண் கொடுப்பது எங்கே? வழக்கு என்று முடியும்? நோய் என்று தீரும்? என்ற கேள்விப் புயல்களுக்கு மத்தியில் சிக்கிச் சிதறிச் சின்னாபின்னமாய்க் கொண்டிருக்கும் அவனுடைய மனது அலை வீச்சின்றி அமைதியாக ஆண்டவனைத் தியானிப்பதே அரிது. ஆனால் அவன் அப்படித் தெளிந்த புத்தியில் த்யானித்து விட்டால் அதுவே ஒரு பெரிய தகுதி என்றெடுத்துக் கொள்கிறார் வராஹ நயினார் (ஸ்திதே மனஸி= நிலையான தெளிந்த அறிவிருக்கும்போது.)

2. ஸுஸ்வஸ்த்தே சரீரே:

நலமான உடலும், பலமான சரீரமும் மனிதனை உலகியல் சுகங்களுக்கே ஆட்படுத்தும். நாவாரச் சுவைத்து, வயிறார உண்டு, மனமார ரசித்து, தினவு தீர சுகம் அனுபவிக்கத் தகுதியான ஒரு உடலை வைத்துக் கொண்டு ஒருவன் 'அற்றது பற்று' என்று ஞானம் பேசுவானா? 'பற்றது விட்டேன்' என்று பக்தி செலுத்துவானா? ஆனால் அப்படிப்பட்ட ஒருவன் பகவானைச் சரண் புகுவான் என்றால் அவன் எத்தனையோ கோடியில் ஒருவனாக இருப்பான். அவனை பூமியைத் தூக்கிய அந்த புண்டரீகாட்சன் ''யோ நர:'' என்று கொண்டாடுகிறான். (ஸுஸ்வஸ்தே சரீரே= நோயற்ற வளமான உடலுடன் இருக்கும் போது)

3. தாது ஸாம்யே ஸ்திதே:

நம் உடலில் 7 அடிப்படையான தாதுக்களால் ஆனது. அவை ஒழுங்காக இயங்குமானால் நம் கை நாடியில் உள்ள வாத, பித்த, கபத் துடிப்புகள் சரிவர நடக்கும். தொட்டுப் பார்த்து அதை வைத்யர்கள் கண்டு கொள்வர். பித்தம் அதிகமானால் சித்தபிரமை, அநுமனின் ராம நாமத்தைக் கேட்ட சீதை தனக்கு பித்தம் அதிகமாகி தானே இப்படி கேட்டுக் கொள்வதாக சந்தேகித்தாள். கபம் அதிகமானால் சளி, ஈளை, இருமல். மரணம் வரும் போது இந்தத் தொல்லை அதிகரிக்கும். வாதம் அதிகமானால் நரம்பு முடக்கம் கைகால்கள் விளங்காமல் போவது இப்படித்தான். இப்படியெல்லாம் சீர் கேடுகள் விளையாமல் உடல்நிலை நாடி சுத்தமாக இருக்கும் போது பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை இம் மூன்றையும் கடந்து பொன் போன்ற பெண்ணான மணமகனின் நாதனாம் நாராயணனை ஒருவன் நினைத்து சரண் புகுவான் என்றால் அவன் மிக அரியன். அதுவே ஒரு மாபெரும் தகுதி என்கிறார் முத்தக் காசு உண்ணும் அந்த முதல்வர். (தாது ஸாம்யே ஸ்திதே = உடற்கூறுகள் முறையுடன் இயங்கும்போது.)

4. ஸ்மர்த்தா

தன்னிடம் சரணடைகிறவனை தன்னை நினைக்கிறவன் என்கிறார் பெருமாள். மனம் வாக்கு காயம் என்ற இம்மூன்றில் மனமே சிறந்தது. மனத்தை அடகுவதனால் தான் மனிதன் மஹான் ஆகிறான். சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும் அப்படித்தான் உருவாகிறார்கள். வாக்கினாலும் செயலினாலும் செய்யப்படும் கர்மாக்களை விட மனத்தால் செய்யப்படும் கர்மாவுக்கு வலிமை அதிகம்.சரணடைதல் என்பது வாயால் கூவுவதோ, கையால் தொழுவது மட்டும் அன்று. இவை இரண்டுக்கும் பலமான பின்னணியாய் இருப்பது ஒருமைப் படுத்தப்பட்ட மனம். பக்தியும், பாவமும் மனத்தினால் விளைபவை. மனம் ஒருமித்த சரணாகதியே சிறப்புடைத்து என்பதை வலியுறுத்த 'ஸ்மர்த்தா' என்கிறார் பெருமாள். (ஸ்மர்த்தா= நினைவு கூர்ந்து சரணடைகிறவன்)

5. விச்வரூபம் ச மாம் அஜம்:

விச்வத்தை தூக்கி வந்த அந்த வராஹம் விச்வமே தன் சரீரமாக இருப்பதையும் பிறப்பு இறப்புக்குத் தாம் அப்பாற்பட்டவனாக இருப்பதையும் இங்கே தெரிவிக்கிறார். கரையில் நிற்பவன் தான் அல்லது கப்பலில் இருப்பவன் தான் கடலில் விழுந்தவனைக் காக்க முடியும். தானே மூழ்கித் தவித்துக் கொண்டிருப்பவன் இன்னொருவனை கைத் தூக்கி விட முடியுமா? பிறவிக்கு அப்பாற் பட்டவன்தான் பிறவிக் கடலில் விழுந்தவனை காக்க முடியும்! என்று 'அஜம்' அதாவது பிறவியில்லாத பெருமாளை அடை என்கிறார். விச்வரூபம் அதாவது இந்த உலகுக்கு உருவம் கொடுத்தவனை சரண் புக வேண்டும் என்கிறார். விச்வாதாரமாய் இருப்பவன் விச்வத்தைக் காப்பது அரிதல்லவே!

6. ததஸ்தம் ம்ரியமாணம்:

இளமையாய் இருக்கும் போதும், உடல் வளமையாய் இருக்கும் போதும் சரணடைந்த வனை முதுமை தன் கிழமையாக்கிக் கொண்ட போது, தான் ஓடி வந்து காப்பதாகப் பெருமாள் கூறுகிறார். உடல் ஓய்ந்து, நலம் மாய்ந்து, வளம் தேய்ந்து இருக்கும் ஒருவனை எவனும் விரும்புவதில்லை. உறவு கொள்வதை விட ஒதுக்கி வைக்கவே விரும்புவார்கள். ஆனால் அந்தக் கால கட்டத்தில் இவன் 'என்னவன்' என்று அன்போடு பரிவு காட்ட ஒரே ஒருவன் இருக்கிறான். அவன் தான் உலகு எடுத்த உத்தமன். ஜகம் காத்த சத்தியன் – வராஹப் பெருமான்! (ததஸ்தம் ம்ரியமாணம் = பின்னாளில் அவன் இறக்கும் தருவாயில்).

7. காஷ்ட பாஷாண ஸந்நிபம்:

பேசிக் கொண்டே உயிர்விடுவோர் உண்டு ப்ரக்ஞையே இல்லாமல் இறப்போரும் உண்டு. ப்ரக்ஞையே இல்லாதவனை அவன் இறக்கும் முன்பே பிணம் போல் நடத்துவார்கள். ஆனால் கல்லைப் போல் கட்டையைப் போல் மரத்துக் கிடக்கும் அவனை மனிதனாக ஆத்மாவாக எண்ணி அன்பு செய்யும் தந்தை ஒருவன் தான்: அவனே பரமன். உயிரற்ற ஓட்டாஞ்சில்லையும் தன் சரீரமாக எண்ணி அன்பு செய்பவன் அவன்! அவன் வாழ்வின் தாழ்வுகளால் மனிதன் பாதிக்கப்படும்போது மனிதனை வெறுப்பதில்லை. விட்டு விட்டு ஓடுவதில்லை. நோயும் நொடிப்பும் மனிதனைத் தீண்டும் போது அவன் உள்ளத்தில் கருணை சுரக்குமேயன்றிக் கசப்புத் தோன்றாது. (காஷ்டபாஷாண ஸந்நிபம்= கட்டையைப் போல் கல்லைப் போல் மனிதன் கிடக்கும் போது)

8.அஹம் ஸ்மராமி:

நினைக்கச் சக்தியில்லாத நீண்ட பிணமாக பக்தன் கிடக்கும் போது அவனை மறக்க மனமில்லாமல் நினைத்துக் கொண்டே இருப்பேன் என்கிறார் பெருமாள். பக்தனின் சரணாகதி பழையதானாலும் பரமனின் வாத்சல்யம் என்றும் புதியது. இளமை மாறாதது. அவனுடைய அன்புக்கு மறதி இல்லை. முடிவு இல்லை. (அஹம் ஸ்மராமி = நான் நினைக்கிறேன்).

9. மத் பக்தம்:

தன்னவனைத் தன்னவன் என்று சொல்லிக் கொள்வதில் ருசி கொள்கிறார் பெருமாள். உலகப்புகழ் பெற்ற கிரிக்கெட் வீரனை தன் மகன் என்று சொல்லிக் கொள்வதில் அவன் தந்தை பெருமை கொள்வது போல, பேச்சு மூச்சற்று, காய்ச்சலுமாய்க் கிடக்கும் தன் பக்தன் முன்னொருகாலத்தில் தன் திருவடி தீண்டியவன் என்ற ஒரே காரணத்தினால் அவனைத் தன்னுடையவன் என்று பறைசாற்றி பெருமை கொள்கிறான். (மத்பக்தம் = என்னுடைய அந்த பக்தனை)

10. நயாமி பரமாம் கதிம்:

இன்றிருந்து நாளை அழியும் இந்த உலகில் இருக்கும் ஒருவனை என்றும் அழியாமல் நின்று நிலைக்கும் தன் ஸ்ரீவைகுண்டத்துக்கு, தானே காப்பாற்றி அழைத்துச் செல்லும் மேன்மையை இங்கே வராஹப் பெருமான் ப்ரகடனப் படுத்துகிறார். பூமி அழிவது! அதில் உள்ள பொருள்கள் அழிவன! மானிடன் அழிபவன்! அவன் சேர்த்த செல்வங்கள் அழிவன! அழியும் உலகத்தில் இருந்து கொண்டு அழியும் உடலில் வாழ்பவன் செய்த சரணாகதி, அழியாமல் பெருமாள் மனத்தில் இடம் பெற்று நிலையான வாழ்வை தேடித் தருகிறது. காரணம் பூமிப்பிராட்டியின் மீது அவன் கொண்ட பாசம், அவளுடைய பிள்ளைகள் மேலும் பாய்கிறது. அவளுக்காக அவன் செய்த இந்த மாபெரும் உபகாரத்தை மனத்தில் கொண்டு நாம் உய்வு பெறத் தவறினோம் என்றால் நம்மினும் மதியீனர் உளரோ?